
# இனிமை இல்லம்



பொங்கும் சமாதானம்
எங்கும் தங்கட்டும்!

## கிறிஸ்தோதுய மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை இல்லம்

இல்லம் : 08. டிசம்பர் 2012. இனிமை : 13

## இறையியலின் பின்னணியில் இல்லங்களுக்கு இனிமை சேர்க்கும் ஒரு குடும்ப காலாண்டிதழ்.

தொகுப்பாசிரியர்கள் :-
எஸ்.ஜோன்ராஜன்
தா.பி.சுப்பிரமணியம்

வெளியீடு:
திருகோணமலை மறைமாவட்ட
குடும்ப வாழ்வுப் பணிக்குழு,
மேய்ப்புப் பணி இல்லம்,
உப்புவெளி, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லத்தின் தோரணவாயிலில் நின்று
## இணைப்பாளர் இதயம் கனிந்து வாழ்த்துகிறார்.



இனிமை இல்லத்து கிறிஸ்தோதய மலரூடாக மீண்டும் உங்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெருமகிழ வெய்துகிறேன்.

நத்தார்ப் பண்டிகை என்றாலே அது நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவும், ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கூறவும் புதிய உறவுகளைத் தேடிக்கொள்ளவும், விட்டுப் போன உறவுகளைத தேடிப் புதுப்பித்துக் கொள்ளவும் கிடைக்கும் அரிய வாய்ப்பல்லவா? அதுதானே இந்தப் பண்டிகையின் விசேடமும், அதன் உலகளாவிய கொண்டாட்டமும்! எவருக்கும் இதுவே இனம், மதம், மொழி கடந்த பொதுவான பண்டிகை!

கிறிஸ்துவின் பிறப்பானது எவ்விதம் விண்ணில் இறைவனுக்கு மகிமையை உண்டாக்கிற்றோ, அது போல மண்ணில் நல்மன தோர்க்கு சமாதானத்தையும் உண்டாக்கிற்று. அந்த அசரீரியால் குறிப்பிடப்பட்ட நல்மனதோர் நாமாக இருந்தால். மேலே சொல்லப்பட்ட அன்பு, உறவு, நன்றி, தாழ்ச்சி, சகிப்பு, மன்னிப்பு போன்ற அருங்குணங்கள் நம்மிலும் நிறைந்திருக்கும்.

எனவே இந்த மகத்தான கொண்டாட்ட வேளையில் ஒருவருக் கொருவர் கொண்டு கொடுத்தும்,ஒருவர் மற்றவருக்காகச் செபித்தும் அந்த அருங் குணங்களின் உரித்தாளிகளாவோம்.

இவ்வாண்டானது நம்பிக்கையின் ஆண்டாக திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

நம்பிக்கை இருவகைப்படும். ஒன்று தன்னம்பிக்கை, மற்றது இறை நம்பிக்கை. தன்னம்பிக்கையின்றி வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. எத்துன்பம் வந்தாலும் அதிலிருந்து மீண்டு கடைத்தேறுவோமென்ற நம்பிக்கையே மனிதனை வாழ வைக்கிறது. ஆனால் இறை நம்பிக்கையில்லாமல் தன்னம்பிக்கை பலன் தராதென்பது நிதர்சனம். தன்னம்பிக்கையானது இக்கட்டான வேளைகளில் தன்வயமிழந்து தள்ளாடும்போது, ஆதாரப்படுத்திக் கொள்ள இறைவனையே தேடுகிறது.எனவே அதீதமான தன்னம்பிக்கை என்ற மனிதனின் கர்வம் இறுதியில் இறை நம்பிக்கையாகப் பரிமாணம் பெறுகிறது. இறைவனைச் சார்ந்தே வெற்றியும் பெறுகிறது!

எம்மிலும், எம்மைச் சுற்றிலும் நடக்கும் பலகாரியங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். போரும், இறப்பும், இழப்பும், கலவரமும், அகதிவாழ்க்கையும், அராஜகமும், எமக்கு கற்பித்ததென்ன? எங்கும் எதிலும் மனிதனின் திட்டமும் செயற்பாடுகளுமல்ல; இறைவனின் சித்தமே ஆட்சி செலுத்துகிறது. என்பதையே!

இந்த மகோன்னதமான நத்தார் - புதுவருடகாலம் உணர்வுபூர்வமான அழகிய நிகழ்வுகளால் உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கட்டும். அந்த நினைவுகளே நெஞ்சங்களில் நீங்காதுறைந்து வரப்போகும் புத்தாண்டு முழுவதும் இனிமையாக உங்களை வழிநடத்தட்டும்!

இனிமை இல்லத்து வாசகர்களோடு இதரர்களுக்கும் எனது இதயம் கனிந்த நத்தார்- புதுவருட வாழ்த்துக்களை அர்ப்பணமாக்குகிறேன்.

**கிறிஸ்துவில் என்றும்,**
**அருட்பணி அன்ரனி லீயோ அடிகள்,**
**இணைப்பாளர்,**
**குடும்ப வாழ்வுப் பணித்துறை,**
**மேய்ப்புப் பணி இல்லம்,**
**உப்புவெளி,திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயரின் மனமுவந்த ஆசிச்செய்தி

இனிமை இல்லத்தின் இனிய வாசகர்களுக்கு இந்த வேளையில் எனது நத்தார் புதுவருட சோபன நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யுத்தம், அழிவு, சிதைவு, சீர்கேடு, அகதிவாழ்க்கை, பிரிவினை, வறுமை, பற்றாக்குறை என்பன போன்றதொரு அசாதாரண சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த எமது மக்களின் கவனத்தை திசை திருப்பி, சீரான பாதையில் செலுத்தி குடும்ப விழுமியங்களைப் பேணும் பயிற்சியை அவர்களுக்கு வழங்கும் முகமாக எமது மறைமாநிலத்தில் குடும்ப வாழ்வுப் பணித்துறைக் குழுவையும், அதன் சார்பில் காலாண்டிதழாக வெளிவரும் "இனிமை இல்லம்" சஞ்சிகையையும் ஆரம்பித்தோம்.

திருகோணமலை தனித்த மறைமாநிலமாக தோற்றம் பெற்றுள்ள இன்றைய காலகட்டத்தில், இதில் மேலும் கவனம் செலுத்த வேண்டுமென்ற நோக்கில், குரு சிரேஷ்டரான அன்ரனி லீயோ அடிகளின் தலைமையின் கீழ் இதனை தொடர்ந்து செய்து வருகிறோம்.

இது தொடர்பில் குடும்பங்களிடையே முடிந்தவரை விழிப்புணர்வை தோற்றுவிக்கும் வகையில் அன்றும் இன்றும் அயராது செயற்படும் அன்னாரை பெரிதும் பாராட்டுகிறோம். அவரோடிணைந்து அவர் பணி சிறக்க உதவும் எழுத்தாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாயகனாம் கிறிஸ்து அவதரித்த வேளையில் அசரீரியாய் ஒலித்த "மண்ணில் நல் மனதோர்க்கு சமாதானம்" என்ற வார்த்தையை அடிநாதமாகக் கொண்டு எமது குடும்பங்களும் நல்ல உள்ளங்களாய், அன்பு, பண்பு, மனிதநேயத்துடன் அயலினமத மக்களுக்கு சிறந்த முன்னுதாரணமாய் வாழ ஒரு கலங்கரை விளக்கமாக இச்சஞ்சிகை உதவட்டும். அதற்காக எனது வேண்டுதலும் நல்லாசிகளும் !

இறையன்பில் வாழும்

**ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,**
**மேதகு ஆயர்,**
**திருகோணமலை மறைமாவட்டம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை இயேசுவின் பிறப்பும் குடும்ப வாழ்வின் வளமும்



மார்கழி பிறந்துவிட்டால் எங்கும் ஒரே மகிழ்வும், புதுப்பொலிவும். காரணம், கிறிஸ்மஸ் பண்டிகை, இறைவன் மனிதனான மகிழ்வு. நாடு முழுவதிலும் மின்விளக்குகள், பதாதைகள் என அடுக்கிக் கொண்டே போகலாம். முண்டியடித்துக் கொண்ட மக்கள் கூட்டம் கடைகளிலும், வீதிகளிலும். இவை எல்லாமே இயேசு மனிதனானதின் மகிழ்வு. பாவ இருளில் மூழ்கியிருந்த மனுக்குலத்திற்கு விடிவு. பரமன் இயேசு பாரில் உதித்த நிகழ்வு. உலகமே மகிழ்வு வெள்ளத்தில் ஆழ்ந்துள்ளது.

திருக்குடும்பத்தின் ஆரம்பம் இயேசு, மரி, சூசை என்ற இக்குடும்ப அங்கத்தவர்கள். இவர்களை நினைவு கூர்வது சாலச் சிறந்தது. இறைவனின் சித்தத்தை "இதோ உமது அடிமை" எனக் கூறி மரியாள் ஏற்றாள். சூசையை அவளின் துணைவனாக அழைத்தனர். பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற பரமன் இயேசு மனிதனானார். குடும்பங்களின் எடுத்துக் காட்டாக விளங்குவது இத்திருக்குடும்பம். இக் குடும்பத்தின் பண்புகளை நாமும் பின்பற்றுவோம். இவர்களின் புனித வாழ்க்கை எமக்கு ஒரு முன்மாதிரிகை.

இறைவன் ஆதியில் இல்லற வாழ்வை ஒரு அருட்சாதனமாக உயர்த்தியுள்ளார். எனவே, அதன் புனிதத்தன்மை மதிக்கப்பட வேண்டும். அன்புறவில் வாழவும். திருக்குடும்பத்தில் விளங்கிய அன்பு, புரிந்துணர்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மன்னிக்கும் மாண்பு எம்மில் விளங்கவும் அன்னை மரியிடம் அருள் வேண்டுவோம். இறைசித்தத்தை நிறைவேற்றுவதில் இறைமகன் இயேசுவும், அன்னை மரியாளும் எமக்கு எடுத்துக்காட்டுக்கள். எனவே கிறிஸ்மஸ் பண்டிகை எமக்கு வெறும் ஆடம்பர விழாவாக அமையாமல் அர்த்தம் நிறைந்ததாக அமைய முயற்சிப்போம்.

மரியாளும் சூசையும் இறைமகன் பிறக்க இல்லிடம் தேடி அலைந்தனர். எங்கும் எதிர்பாராத ஏமாற்றங்கள். இறுதியில் இறைமகன் இயேசு மாடடைகுடிலில் இடம் பிடித்தார். ஏழைக்கும் அரச வைத்தியசாலைகளில் இடம் இருக்க இறைவன் இயேசுவிற்கு இந்த நிலை. மன வேதனை மரியாளை வாட்ட, எல்லாம் இறை சித்தமென ஏற்றுக்கொண்டாள்.

எமது வாழ்விலும் இப்படியான ஏமாற்றங்களும் துன்ப நிகழ்ச்சிகளும் வருவது சகஜம். எனவே இவற்றினை ஏற்று வாழ திருக்குடும்பத்திடம் வரம் வேண்டுவோம். அவர்களின் முன்மாதிரிகையை பின்பற்றுவோம்.

புத்தாடைகள் அணிவதோடும், கிறிஸ்மஸ் கீதங்கள் இசைப்பதோடும் நின்று விடாமல், இறைவன் பிறப்பின் அர்த்தத்தை விளங்கி எம் நாளாந்த வாழ்வின் இவற்றினை நடைமுறைப்படுத்த முயற்சிப்போம். தாழ்மை, ஏழ்மை போன்ற நற்பண்புகளை கடைப்பிடிப்போம். திருக்குடும்பத்தின் பண்புகளைப் பின்பற்றுவோம்.

- அருட்சகோதரி எம். லொறின்டா A.C-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செ**ன்ற இதழில் மனித சந்ததியின் மூதாதையர்களும், முதன்முதலில் கடவுளால் படைக்கப்பட்டவர்களுமான ஆதாமும், ஏவாளும் கடவுளின் கட்டளையை மீறி சாப்பிட்ட அந்த முதற்கனியை, அது ஆண்-பெண் பாலியல் உறுப்பு தான் என்ற கருத்தை ஓர் எழுத்தாளர் வாதாடி நிறுவியிருந்தார். அது குறித்து மாறுபட்ட அபிப்பிராயங்களை சில அருட்தந்தையர்களும், மறையாசிரியர்களும் என்னிடம் கூறியிருந்தனர்.

அந்தக்கனியானது இன்றைக்கு உலகெங்கணும் அவசியமான சத்துணவாக மாறியுள்ள ஆப்பிள்தான் என்பது சிலரது கருத்து. அதேசமயம் அது நன்மை தீமை குறித்த அறிவின் மரம் என புனித விவிலியம் கூறியிருப்பதாகவும் அருட்தந்தையர்கள் சிலர் சான்று பகர்ந்தனர். எதியோப்பிய மதத்தின் வேதநூலான "ஈனோக்" என்ற நூலில் இந்த அறிவின் மரம் குறித்து (31:4) சொல்லப்பட்டுள்ளதாகவும், அது புளியமரம் போல இருந்தது. அதன் கனிகள் மெல்லிய திராட்சைப பழங்களைப்போல இருந்தன என்றும் அதன் வாசனை எங்கும் பரவியிருந்தது என்றும் அது பற்றிய வசனங்களில் மேலும் விபரிக்கப் பட்டிருந்தது. யூதர்களின் வேதப்புத்தகத்தின் பெயர் 'தல்முக்' என்பது. அது அந்தப்பழம் திராட்சை என்கிறது. அதன் இன்னொரு அதிகாரத்திலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ரசத்தினை (WINE) ஏவாள் அருந்தினாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் மேல் நாட்டு ஓவியர்கள் மட்டும் அந்தப்பழம் ஆப்பிள்தான் என்று அடித்துக் கூறினார்கள். தாங்கள் வரைந்த ஆதாம் ஏவாள் பற்றிய காட்சிகளில் ஆப்பிளையே இடம் பெறச் செய்தார்கள். ஏனென்றால் அவர்கள் வாழ்ந்த நாட்களில் ஆப்பிளை விடச் சிறந்த பழமாக அவர்கள் வேறெதையும் அறிந்திருக்கவில்லை அதனாலேயே மேல்நாட்டு ஓவியங்களில் அந்த மரம் ஆப்பிள் மரமாகவும், அந்தப் பழம் ஆப்பிளாகவும் காட்டப்படுகின்றன. ஒரு வேளை கீழைத்தேச ஓவியர்கள் முதன் முதலாக இக்காட்சியை வரைந்திருந்தால், ஆப்பிளுக்குப்பதிலாக மாம்பழத்தை வரைந்திருக்கலாம் என்பது எமது ஆன்மீகத்துறை சார்ந்தோரின் அபிப்பிராயமாகவும் உள்ளது!

-எஸ். ஜோன்ராஜன்-

## பணவீக்கம்



ஆதாமின் ஆப்பிளில்
காதல் இருந்தது,
நியூட்டனின் ஆப்பிளில்
விஞ்ஞானம் இருந்தது;
ஐம்பது ரூபாய் கொடுத்து
நான் வாங்கிய
இன்றைய ஆப்பிளிலோ
பண வீக்கம் இருந்தது!

- திருவோணம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்மஸ் விருந்து

டிசம்பர் 23ஆம் திகதியும் ஆகிவிட்டது. மரியாவின் கணவன் பவன் புல்லுக்கொத்துவதும் பசளையிடுவதும், நீரூற்றுவதுமாக அயராது வேலை செய்து கொண்டேயிருந்தான். மரியா அருகில் சென்று, "இங்க பாருங்க இண்டைக்கு 23ந் திகதி. நாளைக்கு 24ஆம் திகதி. யேசு பாலன் பிறக்கும்நாள். உலகமே கொண்டாடும் மகிழ்வின் நாள். சாமம் 12 மணிக்கு பூசை இருக்குது. பிள்ளைகளுக்கு துணி, மணி வாங்க வேணும் பலகாரம் செய்ய வேணும் நீங்க பேசாமல் இருக்கிறீங்கள், என்று அலுத்துக் கொண்டாள். ஆனால் பவன் எந்த விதமான சலனமும் இல்லாமல் தன் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தான்.

மரியா மனம் கலங்கினாள். இதற்காக கணவனுடன் சண்டை பிடிப்பதா? அயலார் சிரிப்பார்களே? என் தலைவிதி! கோயில் குளம், சூழல் ஏதும் அறியாமல் வளர்ந்து விட்ட இவரை நொந்து என்ன செய்வது? அயலவர்கள் சவுக்கு மரம் வெட்டி வீடு அலங்கரிப்பதும், பாலன் குடில் அமைப்பதுமாக இருந்தார்கள். குழந்தைகளும், சிறியவர்களும் பலூன் ஊதுவதும், சீன வெடி கொளுத்துவதுமாக மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். மறியாவின் பிள்ளைகளும் தாயைப்பார்த்து பெருமூச்சு விட்டார்கள். மரியாவும் தன் கணவனுடன் பேசிப்பேசி அலுத்துப் போய் விட்டாள். சரியான மறையறிவு இல்லாத தன் கணவரை நினைத்து மனம் வருந்தினாள்

கிறிஸ்மஸ் என்றாலே யாருக்குத்தான் மகிழ்ச்சி இல்லை?, ஆனால் எனக்குத்தான் எதுவிமில்லை என முனகிக்கொண்டு மூலையில் முடங்கிக் கொண்டு சிந்திக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள் மரியா; இயேசு பாலனின் எளிமையான பிறப்பறைச் சிந்தித்தாள் உலகைப் படைத்த உத்தமர் மாணிக்கத் தொட்டிலில் பிறக்க வேண்டியவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். ஆனால் அன்னை மரியாளின் தாழ்ச்சி இயேசுவை வழி நடத்தியது.

அன்னை மரியாள் குழந்தை இயேசுவை பொன், வெள்ளி தொட்டிலிலே போட்டுத் தாலாட்டவில்லை. ஆனால் அன்புத் தொட்டிலிலே அரவணைத்தாள். பவுடர், ஓடிக்கலோன், கிறீம், நறுமணம், பூசி குழந்தையை சீராட்டவில்லை ஆனால் அன்பு, பரிவு, இரக்கம், கருணை போன்றவற்றால் அணி செய்தாள். வளர்ப்புத் தந்தை சூசை தனது பிள்ளைக்கு சொத்து, சுகம் சேர்க்கவில்லை.

மாறாக நற்பிரஜையாக்கினார்; கடின உழைப்பையும் கற்றுக் "கொடுத்தார். இதனால் யேசு, மரி, சூசை மூவரும் திருக்குடும்பமாக வாழ்ந்தார்கள். அவர்களிடையே பிரிவு இல்லை, பிளவு இல்லை.அமைதி, மகிழ்ச்சி, எளிமை நிறைந்த வாழ்வு வாழ்ந்தார்கள். இறைவன் மனிதனாக அவதரித்து மனிதனைச் சந்திக்க வந்த நாள் தான் நத்தார் விழா, எனவே நானும் இந்த விழாவை மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் முன் எடுப்பேன் என உறுதிபூண்டு ஒளியாம் இறை மகன் யேசுவிடம் தன் இதய விருப்பத்தைக் கொட்டி மனதுருகி வேண்டினாள். மரியாவையும் நசரேத்துக் குடும்பத்தின் மாதிரிகையாக மாற்றினார் இயேசு.

காலங்கள் கடந்தன. தன் சொல்லாலும், செயலாலும் தான் கற்ற மறைக் கல்வியை மெள்ள மெள்ள தன் கணவனுக்கு உணர்த்தினாள். பிறரின் தேவைகளை உணர்த்தினாள். அன்பையும், தேவையையும் இறை நம்பிக்கையையும் தன் அன்பு வார்த்தைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவைத்தாள். இதன் காரணமாக பவன் மனம் மாறி, இறைவனை முன்னேயும், உலகைப் பின்னேயும் வைத்து வாழத்தொடங்கினான். குடும்பத்துடன் மாலைச் செபங்களில் பங்கெடுத்தான்.

ஞாயிறு வழிபாடுகள் ஆலயப்பணிகளில் பங்கெடுக்கத் தொடங்கினான் அதே டிசம்பரும் வந்தது "மரியா மரியா" என கூப்பிட்டுக்கொண்டே வந்தான் பவன் "ஏன் கூப்பிடுறீங்க" மரியா கேட்ட போது "கிறிஸ்மஸ் வரப்போகிறது. வெளிக்கிடு சொப்பிங் போகவேணும் ஏழைக் குழந்தைகளுக்கு துணிமணி வாங்கிக் கொடுக்க வேணும் அவர்களும் கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டுமல்லவா?ஷொப்பிங் போக வெளிக்கிட்டாள் மரியா, பூரிப்பும் மகிழ்வும் அவளை ஆட்கொண்டது.

தான் கற்ற மறைக்கல்வியைத் தன் கணவனுக்கு உணர்த்தவும் அவனுக்கு மனமாற்றத்தை அளிக்கவும் துணை புரிந்த எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி, "யேசுவே உமக்கு நன்றி' என மனமாரப் புகழ்ந்தாள் மரியா, அன்பினால் எதையும் சாதிக்க முடியும் என உணர்ந்து, மறைக்கல்வியின் அவசியத்தையும் புரிந்தவளாக, கிறிஸ்மஸ் விருந்து தயாரிப்பதில் குதூகலமாக ஈடுபட்டாள் மரியா.

**ஆக்கம் :- பொன்கலன் யசி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவைக் காண்போமே

- இறைமகன் யேசுவுக்கு
  இதயத்தில் இடம் கொடுப்போம்.
  கறை ஏதும் இல்லாத
  குறையற்ற மனங்களாக
  இதயத்தை இனங்காட்டுவோமே, அதை
  நிறைவான இடமாக ஏற்று அங்கே
  இறை வரவின் இனிமையினைக் காணுவோமே!

- பழி நிலைகள் பாதகங்கள்
  ஏதுமற்ற மனங்களென
  புது நிலையை இனங்காட்டும் போது அங்கு
  வளங்கொழிக்கும் நிலை; அதனை
  வாஞ்சையுடன் ஏற்று அங்கே
  நிறை மகிழ்வைப் பொழியவென
  இறை மகன் அங்கே வருவாரே.

- பொய்யாகப் போலிகளாய்
  பொலிவிழந்த நிலைகள் மாற்றி
  மெய்யான வாழ்வதனை
  வாழ மனங்கள் துணியும் போது
  உண்மையே உயர்வடைந்து
  உன்னதமாய் வீற்றிருக்க அங்கு
  உன்னதரின் வருகை உதயமாகுமே

- காரிருளாய் கொண்ட மன
  இருளகன்று போய்விடவே அங்கு
  பேரருளே காணுமந்தப் பெரு மனங்கள்
  சீரழிந்த நிலைகளெல்லாம்
  சிதைந்து அவை கலைந்துபோக
  பேரொளியாம் இறைமகனார் யேசு
  பெருமையுடன் அங்கு வருவாரே!

- அருட்பணி. என். சி. அருள்வரதன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தந்தைமார் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும் ஆசிரியர்கள், பரீட்சைகளில் அதி கூடிய மதிப்பெண்கள் வாங்கும் அளவுக்கு பாடங்களைப் படிப்பிப்பதைவிட, அவர்களது வாழ்க்கைக்கு அவசியமான வேறெதையும் கற்பிப்பதை விரும்புகிறார்களா என்றால், அதற்குரிய பதில் பெரும்பாலும் இல்லை என்பதாகவே இருக்கும். அவர்கள் பிள்ளைகள் படிப்பைவிட ஒழுக்கத்தில், கீழ்ப்படிவில், பிறர் சினேகத்தில் வளரவேண்டுமென்பதில் பொதுவாக எந்த அப்பாவும் அக்கறையெடுப்பதில்லை. ஆனால் அன்றைய பிரபல்யமான அப்பா ஒருவர் தனது மகனை படிப்பிக்கும் பாடசாலை ஆசிரியருக்கு எழுதியிருந்த ஒரு கடிதத்தை இங்கே படித்துப் பாருங்கள்.........

"உழைத்துச் சம்பாதிக்கும் ஒவ்வொரு டொலரும், உழைக்காமல் சம்பாதிக்கும் 5 டொலர்களை விட மதிப்பானது என அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்!"

"அவனுக்கு தோல்வியை ஏற்றுக் கொள்ளவும், வெற்றியை அனுபவிக்கவும் கற்றுக் கொடுங்கள். அவனுக்கு இதர மாணவர்கள் மீது பொறாமைக்குணம் வந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!"

"மௌனமாக இரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தையும் எதற்கெடுத்தாலும் பயந்து ஒளிவது கோழைத்தனம் என்பதையும் புரிய வையுங்கள்!"

"புத்தகம் என்னும் அற்புத உலகின் வாசலை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். இயற்கையின் அதிசயத்தை இரசிக்கவும் கற்றுக் கொடுங்கள்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏமாற்றுவதைவிட தோல்வியடைவது மேலென புரியவையுங்கள், மென்மையானவர்களிடம் மென்மை யாகவும், முரடர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு பயிற்சி கொடுங்கள்!.

"கும்பலோடு கும்பலாகச் சேர்ந்து கரைந்து விடாமல் எந்தச் சூழலிலும் தனது சொந்த நம்பிக்கையின் படி செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்!"


"துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்றும் கண்ணீர் விடுவதில் தவறில்லையென்றும் கற்றுக் கொடுங்கள்!"

"அவன் தன் மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும்.அப்போதுதான் மனித குலத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும்"

" இவற்றில் உங்களுக்கு எவையெவையெல்லாம் கற்பித்தல் சாத்தியமோ, அவைகளையெல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுங்கள்!"

"அவன் மிக நல்லவன்! என் அன்பு மகன்!" என்று தன் கடிதத்தை முடிக்கிறார், அந்தப் பிரபலமான தலைவர். அவர்தான் மனிதப் புனிதனாக இன்றுவரை உலகால் போற்றப்படும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்!

– சாமந்தி –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை மாத்திரம் பலன் தருமா?

**நா**ம் நமக்காகச் செய்யும் பிரார்த்தனையைக் காட்டிலும் பிறருக்காக வேண்டிச் செய்யும் பிரார்த்தனைக்கு வலிமை அதிகம். நம்முடைய சொந்த நலனுக்காகச் செய்யும் பிரார்த்தனை இறைவனை எட்டுவதற்கு காலமும் நேரமும் அதிகமாகலாம் கூடும். ஆனால் பிறருக்காக நாம் செய்யும் பிரார்த்தனையின் குரல் இறைவனுக்கு ஒரு சங்கநாதம் போல, மலைச்சாரலில் கேட்கும் எதிரொலிபோல, அவர் செவிகளில் சீக்கிரமாகவே பாய்ந்து விடும்.

சின்ன வயதில் படிக்கையில் வகுப்பாசிரியரான இராசையா வாத்தியார் படிப்பிக்கும் கம்பராமாயணம் எங்களைப் பெரிதும் கவரும். அதில் வரும் அனுமான் தான் எங்களுக்கு சூப்பர்ஸ்டார்! இராம இராவண யுதத்தின் போது அவன் நிகழ்த்தும் வீரசாகசங்கள் எங்களைப் பிரமிக்க வைக்கும். யுத்தத்தில் ஒரு கட்டத்தில் இராமனின் தம்பியான இலட்சுமணன் இராவணன் மகனான இந்திரஜித்துவின் அம்புகளால் பலமாக அடிபட்டு நினைவிழந்து வீழ்ந்து விடுகிறான். இந்திரஜித் செலுத்தியவையோ மோசமான அஸ்திரங்கள். அதனால் இலட்சுமணனின் உயிர் பிரியப்போகிறது. இந்தச் சமயத்தில் மந்தார மலையென்ற குன்றிலுள்ள ஓர் அபூர்வ மூலிகை கொண்டு வரப்பட்டால் மாத்திரமே இலட்சுமணனின் உயிரைக்காக்க முடியுமென விபீசணன் கூறுகிறான். அதைக் கேட்ட அனுமான் தனது அசுரபலத்தின் மூலம் உயரக்கிளம்பி, ஆகாயமார்க்கமாக தாவிச் செல்கிறான். மந்தார மலையை அடைந்ததும் அதிலுள்ள உயிர்காக்கும் அபூர்வ மூலிகை எதுவென்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்துப்போய் நின்று விடவும் இல்லை. அப்படியே மலையைப் பெயர்த்தெடுத்து கையில் ஏந்திக்கொண்டு மறுபடியும் வாயுவேகம் மனோவேகமாக உயரத்தாவிப் பறந்து வருகிறான். அப்போது அவனை விடவும் பலம் கூடிய அசுரசக்திகள் அவன் வழியில் குறுக்கிடுகின்றன. மேற்கொண்டு போக விடாது தடுக்கின்றன. அந்த வேளையில் அவன் நாவிலிருந்து ஓங்காரமாய் ஒலித்த குரல் "ராமா" என்பதாகும். இவ்வாறு அந்தநேரத்தில் "ராமா....ராமா" என்று இறைவனின் நாமத்தைச் சொல்லி அவன் பிரார்த்தனை செய்தானே, அது எதற்காக? தான் கொண்டு செல்லும் பொருள் ஓர் உயிரைக்காப்பதற்காக என்கின்ற தன்னலமற்ற ஒரு பரோபகாரப் பணிக்காக அல்லவா? ஒரு சில நாளிகைப் பொழுதுக்குள் அந்த மூலிகையானது குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர வேண்டும். கொண்டு செல்கிறவனோ வீரர்களுக்கெல்லாம் பெரிய வீரன் ஆனால் அந்தப்பரபரப்பான நேரத்தில் ஓர் இக்கட்டான நிலையும், அதன் காரணமாக இயலாமையும் ஏற்பட்ட போது அவன் என்ன செய்தான்?

"ராமா" என்று கூவினான் அதன் விளைவாக ஒரு புதிய சக்தி அவனுள் பிறந்தது. ஓர் எழுச்சி ஏற்பட்டது. ஒரு மலர்ச்சி உண்டாயிற்று. புதிய வேகத்துடன் மீண்டும் பாய்ந்தான். எதிர்த்த சக்திகள் வலுவிழந்தன. அதனால் அடுத்த சில நாளிகைகளில் போர்க்களத்தை அடைந்தான் இலட்சுமணனை உயிர் பிழைக்க வைத்தான்.

பிரார்த்தனை செய்யும் போது இறைவனை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அங்ஙனம் பிடிக்கும் போது அந்த இறை சக்தியானது நமது ஆன்ம சக்தியாக மாறி நமக்குப் புதியதொரு பலத்தை ஊட்டும் என்பதற்கு உதாரணம் தான் இந்த ஆஞ்சநேயன் என்ற அனுமானின் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்ததற்கெல்லாம் இறைவனைக் கூப்பிடுகிறவர்களுமுண்டு. அது குற்றமில்லை. அது வரவேற்கக் கூடியதும் தான்.ஆனால் இங்கே, பள்ளிக்கூடத்தில் எனக்கு சமயப்பாடம் போதித்த மரியாம்பிள்ளை விறதர் அதுபற்றிச் சொன்ன ஒரு கதையையும் அதில் தொனித்த கருத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்...

நம்முடைய சக்தியை உபயோகிக்காமல், நம்முடைய சரீரத்தை உழைக்க விடாமல், நம்முடைய சிந்தனையை செம்மையான முறையில் ஈடுபடுத்தாமல், மிகச் சுலபமாக காரியத்தைச் சாதித்துவிட எண்ணி இறைவன் நாமத்தை உச்சரித்தால் எப்படிப்பலன் கிடைக்க முடியும்?

செய்ய வேண்டிய கடமையை – முயற்சியைச் செய்யாமல் "கடவுளே", என்று இறைவன் முன்னிலையில் முடங்கிக்கொண்டிருந்தால் இறைவன் அந்த மனிதருக்கு உதவி செய்வார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை.

இதனை விளக்க ஓர் உபகதையை அந்தநேரத்தில் மரியாம்பிள்ளை விறதர் சொல்வார். ஒருவன் புனித அந்தோனியாரின் அளவிறந்த பக்தன். எடுத்ததுக்கெல்லாம் அந்தோனியாரின் பெயரையே ஓயாமல் உச்சரித்துக் கொண்டிருப்பான். அவன் ஒரு கைவண்டியில் பொருள் பண்டங்களை ஏற்றிச் சென்று ஊர் ஊராக விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான். ஒரு நாள் கிறிஸ்மஸ் வியாபாரத்திற்காக பொருள் பண்டங்களை அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றிக் கொண்டு தள்ளிச் சென்ற போது நடு வழியில் சுமைதாங்க முடியாமல் வண்டி குடைசாய்ந்து விட்டது. சாய்ந்த இடமோ ஓர் அத்துவானக்காடு. மனித சஞ்சாரமில்லாத இடம். பக்தன் கலங்கிப்போய் "அந்தோனியாரே...கோடி அற்புதரே.. என் உதவிக்குவாரும்!.." என்று உரக்கக் கூவினான். அதைக்கேட்டு அந்தோனியாரோ,வேறு யாருமோ உதவிக்கு வருவதாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவன் "நானுன்னை நினைக்காத நேரமில்லை. வழிபடாத பொழுதில்லை. இப்போது நீ வந்து எனக்கு உதவி செய்யவில்லையென்றால் உன்னை கும்பிட்டதால் என்ன பயன்? ஆகையால் நீ இருப்பது உண்மையானால், நான் உன்னை வழிபட்டதும் உண்மையானால், இப்போது வரவேண்டும். கவிழ்ந்து கிடக்கும் இவ் வண்டியை நிமிர்த்தித்தரவேண்டும்!." என்று முறையிட்டான். அப்போதும் அந்தோனியார் வரவில்லை.

பக்தனுக்கு ஆத்திரமுண்டாயிற்று "ஏய் அந்தோனியே! நான் இவ்வளவுதூரம் கத்திக்கதறியும் நீ வரவில்லையே....? இனியும் உன்னை நம்புவதால் எவ்வித பலனுமில்லையென்பது உறுதியாகவிட்டது. இந்த ஆபத்து அவசரத்தில் எனக்குக் கைகொடுக்காத நீ, என் இதயத்திலிருந்து அகல வேண்டியவன்! நான் பக்தி செலுத்த அருகதையற்றவன்! என்றெல்லாம் அலறினான்! உளறினான்!.

அப்போது அவ்விடத்தில் திடீரென்று ஒரு பிரகாசம் தோன்றியது. அந்த ஜோதியின் நடுவே கையில் குழந்தை யேசுவை ஏந்தியவாறே அந்தோனியார் நின்றிருந்தார்.

பக்தன் பிரமித்ததுப் போனான். தன் கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. "ஐயோ அந்தோனியாரே...வந்து விட்டீரா..? என்று ஆனந்தக் கூச்சலிட்டான்.

"ஆம் வந்து விட்டேன்!". என்று புன்முறுவல் பூத்தார் அந்தோனியார்.

"என் வண்டி பாரத்தால் குடைசாய்ந்து விட்டது. உடனே அதை நிமிர்த்திக் கொடுங்கள் அந்தோனி முனீந்திரரே!" என்று இறைஞ்சினான் பக்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைச் செய்ய நான் உனக்கு வேலைக்காரனா?" என்று கேட்டுச் சிரித்தார் அந்தோனியார்.

"உம்மீது பக்தி செலுத்துகிறவர்களுக்கெல்லாம் நீர் வேலைக்காரன்தான்! அதிலென்ன சந்தேகம்?" என்று கேள்வியால் அவரை மடக்கினான் பக்தன்.

"அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்மீது பக்தி செலுத்தி பூஜிப்பவர்களுக்கு நான் வேலைக்காரன்தான் அவர்கள் கேட்பதை தரக் கடமைப்பட்டவன்தான். ஆனால் அதில் முக்கியமான நிபந்தனையொன்று உள்ளதே: அது உனக்குத் தெரியுமா? என்று கேட்டார் கோடி அற்புதர்.

"நிபந்தனையா?" என்று கேட்டு விழித்தான் பக்தன். அதென்ன நிபந்தனை? என்று கேட்டான்.

"உனக்கு சிந்திப்பதற்கு அறிவைத் தந்திருக்கிறார் ஆண்டவர் உழைக்க உடலைத் தந்திருக்கிறார். இயங்குவதற்கு உடலில் சக்தியையும் கொடுத்திருக்கிறார். கால்களையும் கைகளையும் கண்களையும் தந்திருக்கிறார். அது எதற்காக? அவற்றையெல்லாம் நீ பயன்படுத்தாமல், உன்னால் முடியக் கூடிய காரியத்திற்குக் கூட என்னைக் கூப்பிடுவதற்காகவா? வண்டி குடைசாய்ந்து விட்டதென்றால் இருகரங்களாலும் அதைத் தூக்கி நிமிர்த்த நீ முயற்சி செய்திருக்க வேண்டுமல்லவா? நீ முயற்சி செய்து, மேலும் மேலும் கடுமையாக முயற்சி செய்து, அப்படியும் அந்த வண்டியை உன்னால் நிமிர்த்த முடியவில்லையென்றால், அப்போது நீ என்னைக் கூப்பிட்டால் நான் உதவ ஓடிவருவேன்.

"ஆனால் நீயொரு சோம்பேறியாகி, உன் கடமையைச் செய்யாமல், ஒருவித முயற்சியிலும் ஈடுபடாமல், நீ நினைத்த மாத்திரத்தில் நான் வந்து இந்த வண்டியை தூக்கி நிறுத்தித்தரவேண்டுமென்றால். அதன் விளைவு என்ன ஆகும் தெரியுமா? கால்களிருந்தும் நீ முடவனாகி விடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிருந்தும் நீ குருடனாகி விடுவாய். கைகளிருந்தும் இயக்கமற்றவனாகி விடுவாய் உனக்கே உன்னால் ஒரு பயனும் இல்லாமல் போய்விடும். உன் சோம்பேறித்தனத்தை வளர்த்த குற்றமும் அதனால் என்னைச் சேர்ந்துவிடும். இப்போது புரிகிறதா? பக்தா, நீ கூப்பிட்டவுடன் நான் ஏன் வரவில்லை என்பதற்கான காரணம்?" என்று கூறிவிட்டு மறுகணமே மறைந்து விட்டார் அந்தோனியார்.

அவரின் இதமான உபதேசத்தால் தெளிவும் புத்துணர்வும் பெற்ற பக்தன் அந்தோனியார் நின்று காட்சி தந்த இடத்தை வீழ்ந்து வணங்கினான். தொட்டுக் கண்களிலும் ஒற்றிக்கொண்டான். எங்கிருந்தோ தன்னில் வந்து சேர்ந்துவிட்ட ஒரு புதிய தைரியத்துடன் இரு கரங்களாலும் குடைசாய்ந்திருந்த வண்டியை இழுத்து நிமிர்த்த முயன்றான். எப்படியோ ஒரு வழியாக முக்கித்தக்கி நிமிர்த்தியும் விட்டான். அப்போது வண்டி மட்டுமா நிமிர்ந்தது? தன் பக்தி மட்டில் தனக்கு இதுவரை இருந்த குருட்டாட்டமும் விலகி மனமும் நிமிர்ந்து விட்டதாக அவன் நினைத்தான்.

இந்தக் கதையை நான் உங்களுக்கெல்லாம் நினைவு படுத்துவதன் நோக்கம் இதுதான்; அதாவது — நாம் இறைவனை வழிபடத்தான் வேண்டும். அதே நேரத்தில் இறைவனே வந்து எல்லாவற்றையும் செய்து முடித்துத்தருவார் என்று எதிர்பார்க்கக் கூடாது. முழு மூச்சாய் நமது பணிகளைச் செய்து முடித்து, முடியாத போது அவரை அழைக்க வேண்டும். அப்போதும் அவர் நேரில் நம்முன் வரவேண்டு மென்ற நியதி இல்லை. ஏதோவொரு ரூபத்தில் அல்லது ஒரு நிகழ்ச்சியில் அவரது அருள் நிச்சயமாக அப்போது கிடைக்கவே செய்யும். இதையே அமரராகிவிட்ட மரியாம் பிள்ளை விறதரும் சொன்னார். அதை நானும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

— எஸ் ஜோன்ராஜன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவின் பிறப்பு அர்த்தமுள்ளதா?



இறைமகன் கிறிஸ்து ஏன் மனிதாவதாரம் எடுத்தார்? கடவுளாக வேண்டியவர் எதற்காக மனுவுருவானார்? மிருகத்தன்மையுடன் வாழும் மனிதனுக்கு மனிதனும் தெய்வமாகலாம் என்று தனது வாழ்வாலும் வார்த்தையாலும் கற்றுக் கொடுப்பதற்காக; இறை சாயலாக படைக்கப்பட்ட மனிதனுக்கு மீளவும் அத்தன்மையை அடைகின்ற வழியைக் காட்டுவதற்காக; "இவ்வுலகில் வாழ்வதைவிடச் சாவதே மேல்" என்று மனவிரக்தி அடைந்தவர்களுக்கு, வாழ்வதிலும் அர்த்தமுண்டு என்று வாழ்ந்து காட்டுவதற்காக. தெய்வமாக இருந்து இதைச் செய்ய முடியாது என்றறிந்த இறைவன், மனிதனும் தெய்வமாகலாம் என்பதை உணர்த்த மனிதன் அவதாரம் எடுத்தார்.

அமைதியின் அரசராக மனிதவதாரம் எடுத்த இயேசுவின் பிறப்பு விழாவை நாம் கொண்டாடுகிறோமாயினும் எம்மகத்திலே அமைதியில்லை; அயலிலே அமைதியில்லை, நாட்டிலே, அயல் நாடுகளில் ஏன் அவனியிலே அமைதிக்காக ஏங்கித் தவிக்கின்ற உள்ளங்கள் எத்தனை! எத்தனை!.

அவனியை விட்டுவிட்டு, சமுதாயத்தின் அடித்தளமாக விளங்கும் அடுத்து இருக்கும் குடும்பங்களையும், ஏன் நாம் குடும்பங்களையும் சற்று உற்று நோக்குவோம். அன்பால் உருவாக வேண்டிய, அன்பால் உயிரூட்டம் பெற வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களிலே நிலவ வேண்டிய அமைதி எங்கே? வாழ்நாள் முழுவதும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வதாக இறைமக்களும் இறைவன் முன்னிலையில் அளித்த வாக்குறுதியை மீறி, கீரியும், பாம்பும் போல வாழுகின்ற குடும்பங்களில் அமைதிக்கும் அன்புக்கும் எங்கே இருப்பிடம் இருக்கப் போகிறது? இதுமட்டுமா குடும்பங்கள் குடும்பங்களாக வாழாது குலைந்து கணவன், மனைவி மக்கள் எல்லாம் எங்கெங்கோ பிரிந்து வாழும் நிலை. "இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்ற இறைவார்த்தை எந்தளவிற்கு எடுபட்டதாக விளங்குகிறது. சிந்திக்க வேண்டிய விடயம்.

நமது கடமையை நேர்மையாக நிறைவேற்றி, குடும்பத்தின் சமாதானத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் உழைப்பதில் அக்கறை செலுத்தும் பெற்றோர் எம்மத்தியில் அரிதாகவே உள்ளனர். பெற்றோரது பிழைகளை பிள்ளைகளே சுட்டிக் காட்டுகின்ற நிலைதான் நிலவுகிறது. பெற்றோரைக் கனம் பண்ணி, அன்பு செய்து முழுமையாக குடும்ப ஒற்றுமையை உறுதிப்படுத்த ஒத்துழைக்கும் பிள்ளைகள் இன்று எக்குடும்பத்தில்தான் உள்ளனர்? தொடர்புச் சாதனங்களால் கலவரப்பட்டு, தன்னைப் பற்றித் தன் குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்காது, சீர்குலைந்து போகின்ற வர்களாகவே இன்றைய இளம் தலைமுறையினர் உருவாகிக் கொண்டிருக்கின்றனர்.

எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பணிபுரியும் வைத்தியர்கள், வாத்திமார், வக்கீல்கள்; பற்றிப் பார்த்தோ மானால். சாகக் கிடக்கும் உயிருக்குக் கூட 'பணம் கொடுத்தால்தான் வருவேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் மருத்துவர், ஜெயிக்கக் கூடிய வழக்கைக்கூட பணம் கொடுக்காததால் தோற்கடிக்கும் வக்கீல்கள், குற்றவாளிகளை விடுதலை செய்வதும், நிரபராதிகளை தண்டிப்பதும் சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வாகி விட்ட காலமிது; பின்னேர வகுப்புக்குச் சென்ற பிள்ளையை 'Fees' கட்டடத்தவறியதால், புத்தகப் பையுடன் விரட்டிடும் வாத்திமார், இப்படியாக இன்னும் எத்தனையோ ரகங்கள்.

இவ்வாறெல்லாம் இவ்வுலகில் நடப்பதால், இயேசு பிறப்பின் நோக்கம் தோல்வியில் முடிவடைந்த கதையாகி விட்டதா? அவர் ஏற்றி வைத்த ஒளிவிளக்கு அணைந்து விட்டதா? அவரது பிறப்பில் ஒலித்த விடுதலை கீதம் அர்த்த மற்றதாகிவிட்டதா? இல்லவே இல்லை. அவர் நினைத்தவை எல்லாம் நடந்தே தீரும். அவர் கனவுகள் எல்லாம் நனவாக மாறும் அவர் தொடங்கி வைத்தவை தொடர்ந்து நடைபெறும் ஏனெனில் அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாத தெய்வம். அவர் பாத அடிகளைப் பின்பற்றி அவர் சென்ற வழியில் நாமும் செல்ல எம் வாழ்வையாக்குவோம். இறை இயேசுவின் ஆசீர் அனைவரது வாழ்வையும் வளப்படுத்துவதாக!.....

– ஜெயவதனி மரியதாஸ் –

## ஆதலினால் காதல் செய்வீர்!

**கா**தல் என்ற வார்த்தையை கேட்கும் போது பலருக்கும் முகத்தில் புன்னகை தோன்றும். காதலைப்பற்றி வாசிக்கும் போது உற்சாகம் பீரிடும். கண்விழித்துச் சொப்பனம் காண்பார்கள் சிலர். இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் மனோராஜ்ஜியங்களும் அற்புதங்களும் ஏற்படுத்தக் கூடியதுதான் காதல்!.

ஒரு முறைதான் காதல் வரும்; அது தமிழர் பண்பாடு என்பதெல்லாம் அந்தக்காலம் வயிற்றில் உணவு இல்லாத போது பசியெடுப்பதுபோல, மனதிற்கு உற்சாகமும் நம்பிக்கையும் தரும் ஒரு ஆணோ, பெண்ணோ வந்து சேரும் போதெல்லாம் காதல் வரும் என்கிறார்கள் அனுபவசாலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் பதின்மூன்றில் தொடங்கி பாடையில் போகும் வரையில் எல்லாக் காலகட்டங்களிலும் பல்வேறு நபர்களிடமும் பலவிதங்களில் காதல் வருமாம். ஆனால் அவ்விதம் மனதில் அரும்பிய காதலை யாரும் வெளியில் சொல்வதில்லையாம். தமது நடபடிகளில் பிரதிபலிப்பது மில்லையாம். காதல் வரும்போது அதை வெளிப்படுத்தி விட்டால் மனதில் பாரங்கள் இருக்காது. பாசாங்குகள் தோன்றாது. அதை மறைக்க மறைக்கத்தான் அழுத்தம் அதிகமாகி ஒரு நாள் வெடித்துச் சிதறிவிடும் நிலை தோன்றுகிறது.

எதற்காக காதலிக்கிறீர்கள் என்று கேட்டால் அவள் அல்லது அவன் கிடைத்தால் என் வாழ்க்கை மகிழ்சியாகவும் நிம்மதியாகவும் இருக்கு மென்று கூறுவார்கள் ஆனால் அது முற்றிலும் சுயநலமான வார்த்தையென்று யாரும் உணர்வ தில்லை காதல் என்பது விட்டுக்கொடுத்தல். தான் விரும்பும் நபர் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுதல். தான் விரும்பும் நபர் தன்னைவிட நலமாக இருக்க வேண்டும் என்றுதான் காதலிப்பவர்கள் நினைக்க வேண்டுமே தவிர, வடிவு, படிப்பு, வசதிகள் என்று பெருத்த எதிர்ப்பார்ப்புகளுடன் தமது சுயநலனுக்காக காதலிப்பவர்கள் தோற்றுத்தான் போகின்றனர். எனவேதான் சுயநலமிகள் அனைவருக்கும் தோல்வியை பரிசாக அளிக்கிறது காதல்,

காதலியோ, மனைவியோ கவனிக்காவிட்டால் கை விட்டுப்போய்விடுவார்கள். எனவே காதலிப்பது எந்த அளவுக்கு முக்கியமானதோ அதைவிட முக்கியம் அவர்களைக் கவனிப்பது. இன்றைக்கு செல்போன், ஈமெயில் என்று எத்தனையோ வசதிகள் வந்து விட்டன. ஒவ்வொரு நிமிடமும் ஆளுக்காள் தொடர்பில் இருக்க முடியும். எனவே நேரமில்லை யென்ற காரணத்தைக் கூறி கண்டுகொள்ளாமல் விட்டு விடாதீர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடிந்த கையோடு காதலும் முடிந்து போவதற்கான காரணம் நிறையப் பேருக்குப் புரிவதில்லை. காதலிக்கும் போது எந்த வித உடன்பாடோ, உத்தரவாதமோ கிடையாது. ஆனால் காதலர்கள் திருமணம் முடிந்தவுடன் தம்பதிகளாக மாறிவிடுகின்றனர். அவர்களுக்கு பொறுப்புகள் கூடி விடுகின்றன. பணம் சம்பாதிப்பதில் தொடங்கி குடும்பம் குழந்தையென்று பல சமூகப் பொறுப்புகளோடு வாழ வேண்டியுள்ளது.

இதனால்தான் காதலிக்கும் போது கிடைத்த இன்பத்தை ஒப்பிட்டுப்பார்த்து கல்யாணத்திற்குப் பின்னர் காதலர்கள் சண்டையிடுகின்றனர். எனவே காதல் வேறு கல்யாணம் வேறு என்பதைப்புரிந்து கொண்டு அதற்கேற்ப காதலிப்பவர்கள் மட்டுமே வெற்றியைப் பரிசாகப் பெறுகின்றனர். என்கிறார்கள் மனோதத்துவ வியலாளர்கள்.

அதனாற்றான் காதலிக்கும் காலத்திலும் சரி, கல்யாணமான பின்பும் சரி, காதலைக்காதலோடு இரசித்து அனுபவிப்பவர்களுக்குத்தான் வாழ்க்கை அழகாகவும் ஒற்றுமையாகவும் நீடித்த ஆயுளுடனும் இருக்குமென அவர்கள் மேலும் கூறுகின்றனர். ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தோரே!.

– அக்கரை மாணிக்கவாசகம் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித குலத்தை பாவங்களில் நின்று மீட்டு இரட்சிக்க, வாழ்வுக்கு நல்வழி காட்ட போதித்தும், சாதித்தும் - வாழ்ந்து காட்டியும் நல்வழிப் படுத்த, நம் பரமபிதா தம் திருக்குமாரனை பூவுலகுக்கு அனுப்பி வைத்தார். இப்படி அனுப்பி வைக்க வேண்டும் என்பதற்காக நீண்ட காலம் - ஆண்டாண்டு காலம் காத்திருந்தார்! ஏன்?

கடவுளின் ஒரேமகன் மனிதனாகப் பிறக்க தகுதியான ஒரு மானிடப்பெண் தாயாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக காலங்காலமாகக் காத்துக் கிடந்தார்! மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்க அவர் ஒரே மகனை உவந்தளிக்க சித்தமாக தம் கைப்பிடியில் வைத்திருக்கிறார். ஆனால் ஒரு தேவதாயாரைத்தான் அவரால் சித்தம் செய்ய முடியவில்லை.

அப்படியிருக்கையில்தான் கன்னி மரியாள் அவர் கண்ணில் தென்பட்டார்! தேடித் திரிந்த தேவதையாள் அவர் கைக்கு எட்டினாள்! மனம் பூரித்தார்! தன் தேவ தூதனை அனுப்பி இப்படி சொல்ல வைத்தார்."பிரியமானவளே! பூரணமானவளே! மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே! பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளும் நீயே! உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்தாமே!" என்று வாழ்த்துரைத்ததன் மூலம் தேவதாயாரையும், தேவபாலனையும் ஒன்றாகவே – சமமாகவே நோக்குகிறார் என்பதை நாம் குறித்துக் கொள்ள வேண்டும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரணமானவர் இறைவன் மட்டும்தான்! அப்படியிருக்க 'பரிபூரணம்' என்ற சொல் மனித வரலாற்றில் –விவிலய நூலில் கூட மரியம்மாளுக்கு மட்டும்தான் பாவிக்கப் பட்டிருக்கிறது!. மரியம்மாள் போன்ற புனிதமான பூரணமான பெண் தோன்றியிருக்காவிட்டால், மானிட மகன் பிறந்திருக்க முடியாது.இதுதான் உண்மை! தேவதாயாரைப் புறக்கணிக்கும் மாற்றுச் சபையினர் இதை உணர வேண்டும்! மனிதர் செய்த பாவங்களுக்காக சொல்லொணா சித்திரவதைப்பட்டு சிலுவையில் மரித்த எம் இயேசு பிரான் பட்ட வேதனைகளிலும் பார்க்க கொடூரமான துன்ப வேதனைகளை அனுபவித்த மனித ஜீவன் ஒன்று உண்டு! அது யார் தெரியுமா? பரிசுத்த தேவ தாயார்தான்! பெற்ற மகன் இரத்தம் சிந்தி சொல்லொண்ணாக் கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதை கண்ணெதிரிலே கண்டு, அந்த பெற்ற இதயம் எப்படியெல்லாம் வேதனையில் இரத்தம் சிந்தியிருக்கும்! இயேசுபிரான் பரம பிதாவால் உருவானவர்! மரியாள் தெய்வ மங்கையாக தானாகவே உருவானவள்! இதன் தாற்பரியத்தை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! – அன்னை மரியாளையும் தந்தை சூசையையும் போன்று அன்பும் அறனும் உடைத்தாய பரிசுத்த இல்லறம் நடத்தினாலே நாம் (இயேசுவைப் போல) நன் மக்களைப் பெற்று இனிய இல்லறம் நடத்தி சுபீட்சம் காணலாம்.!

இனிய நத்தார் செய்தி நமக்கு உணர்த்துவது இதுதான். இனிய இயேசுபாலன் அவதரித்தது, இனிமை இல்லம் நடத்தி பூரணத்துவமாய் வாழ்ந்த அன்னை மரி, தந்தைசூசையின் இனிய இல்லறத்தால் ஆகும்! மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கும் அத்திருக்குடும்பத்தை இந்த நத்தார் சோபன நாளில் வாழ்த்திப் போற்றுவோமாக! வான தூதரோடும், மூவிராசாக்களோடும் நாமும் வாழ்த்துக்கள் பரிசுகள் கொடுத்து துதி பாடி கொண்டாடுவோம்.!

– சூசை எட்வேட் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனித நேயப் பணிகளை முன்னெடுத்து நத்தார் திருநாளை சிறப்பிப்போம்!**



குடும்பம் ஒரு கோயில் ஏனெனில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவையார் வாக்கு. நம் ஒவ்வொருவருக்கும் கண்கண்ட தெய்வங்களாக இருப்பவர்கள் நமது பெற்றோர். இவர்கள் உயிரூட்டி, உணவூட்டி நம்மை பேணி வளர்த்தவர்கள். அன்பால், அறிவால், பண்பால், பாசத்தால் நம்மை கண்ணின் மணிபோல் கட்டிக்காத்தவர்கள். நம் உயிராக, உணர்வாக பெற்றோர் இருப்பதால்தான் நாம் அவர்களைக் கடவுளாகக் காண்கின்றோம்.

அதே வேளையில் 'குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை', குடும்பம் தேவ அழைத்தலின் விளை நிலம்' என்று திருச்சபை போதிக்கிறது. குடும்பம்தான் திருச்சபைக்கு தேவையான பணியாளர்களை பெற்றுக்கொடுக்கிறது. எனவேதான் சமூகத்திலே குடும்பம் ஒரு முக்கிய கூறாகத்திகழ்கிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த குடும்பங்களின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது? திருக்குடும்பத்திலே மழலையாய் வந்துதித்த இயேசு கொண்டு வந்த அன்பு, அமைதி, மகிழ்ச்சி குடும்பங்களிலே ஊற்றெடுக்கின்றதா, கிறிஸ்துவின் பிறப்பின் அர்த்தம் தொனிக்கின்றதா என்று சிந்திப்போம்.

இன்று விஞ்ஞான-தொழினுட்ப வளர்ச்சியும் அறிவியல் மாற்றமும் குடும்ப மதிப்பீடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் ஆன்மீகத்தை விடுத்து உலகப் போக்கிலான வாழ்க்கைக்குள் நகர்த்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து மனுவுரு எடுத்த விழா நமக்கு புலப்படுத்தும் செய்தி, அவர் கடவுள் என்ற நிலையில் இருந்து இறங்கி மனித நிலையை தேர்ந்து கொண்டார்(பிலி: 2/6-11) அவர் இறைசித்ததிற்கு பணிந்தார். அன்னை மரியாவும் இறைதிட்டத்திற்கு கீழ்ப்படிந்தார் (லூக் 1:38) ஆனால் இன்றைய குடும்பங்களுக்குள்ளே இத்தகைய பணிவு தாழ்ச்சி இருக்கின்றதா? கணவனும் மனைவியும் ஏட்டிக்கு போட்டியாக செயல்படுகின்றார்கள். இதனால் வாக்குவாதங்களும், விதண்டாவாதங்களும், சண்டை சச்சரவுகளுமே வாழ்க்கையாகி விட்டன. இந்த நிலை மாற வேண்டுமானால் பவுல் அப்போஸ்தலர் எபே 5/21-22 சொல்வது போல ஒருவர் மற்றவருக்கு பணிந்து வாழ வேண்டும்.

கிறிஸ்துவின் பிறப்பு அவர் மனுக்குலத்தின்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பை படம்பிடித்துக் காட்டுகிறது. புனித யோவன் நற்செய்தி 3:16 இதற்கு சான்று பகர்கின்றது". தம் மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வை பெறும் பொருட்டு, இந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்". இயேசுவின் அன்பு தன்னலமற்ற, தூய்மையான தியாகம் நிறைந்த அன்பு. இத்தகைய அன்பு இன்றைய குடும்பங்களிலே காணக்கிடைப்பது அபூர்வம்.

இன்று வீடுகளிலே நாம் காண்பது போலியான அன்பு, வியாபார அன்பு, ஏமாற்றுகின்ற அன்பு, எதிர்பார்க்கின்ற அன்பு இந்த நிலையிலே கிறிஸ்து கொண்டு வந்த அன்பு நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடி கொள்வது என்பது சாத்தியமற்றதாகும். கிறிஸ்துவின் உண்மையான அன்பை குடும்பங்கள் சுவைக்க வேண்டுமானால், கிறிஸ்து நம்மை அன்பு செய்தது போல, நாமும் ஒருவர் மற்றவரை அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் கிறிஸ்து நம்மை எவ்வாறு அன்பு செய்தார் என்றால், நமக்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்துள்ளார்.

'தம் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு' யாரிடமும் இல்லை' என்று சொன்ன ஆண்டவர் இதற்கு செயல்வடிவம் கொடுத்தார். கணவன்-மனைவியிடம் இத்தகைய தியாகம் நிறைந்த மன நிலையும், விட்டுக்கொடுக்கின்ற பண்பும் நிலைத்திருக்கும் போதும் ஒவ்வொரு இல்லமும் ஆனந்த இல்லமாக திகழ முடியும்.

கிறிஸ்து பிறப்பு விழாச் செய்தி வானதூதர்களால் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது "அது மகிழ்வின் செய்தியாக இருந்தது "இதோ உலகமனைத்திற்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியைஅறிவிக்கிறேன்" என்று தூதர் அறிவித்தார். இன்று அனேகமான குடும்பங்கள் இந்த மகிழ்ச்சியை தொலைத்துவிட்டு அதைக் கண்டடைய அலைந்து கொண்டிருக்கின்றார்கள். மகிழ்ச்சியைக் அனேகமானோர் பணம், பதவி, பட்டம், சொத்து, செல்வம் போன்ற வற்றிலே அடைய முடியும் என்கின்ற தவறான எண்ணம்தான் அதை அவர்கள் அடைய முடியாதபடிக்கு தடையாய் உள்ளது என்பதை மறந்து விட்டார்கள்.

"பணம் பத்தும் செய்யும் என்பது நாம் அடிக்கடி பாவிக்கின்ற பழமொழி இன்றும் பணம் சேர்ப்பதற்காக ஊழல், லஞ்சம், பதுக்கல், சுரண்டல், ஏமாற்றுதல் கள்ளத்தராசு கலப்படம், கொலை, கொள்ளை, வழிப்பறி போன்றவை பெருகி குடும்பங்களும் சமூகமும் குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கின்றன. செல்வத்தைச் சேர்க்க விரும்பி பலர் அறிவீனமான, தீமை விளைவிக்கக் கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்து விடுகிறார்கள். அவை மனிதரைக் கேட்டிலும் அழிவாலும் ஆழ்த்துபவை. பொருளாசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். அதே ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தங்களாகவே தங்கள் மேல் தருவித்துக் கொள்கிறார்கள்.

இயேசுவின் பிறப்புவிழா குடும்பங்களுக்குள் உண்மையான அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால் அவர் சொல்வதைப் போல செய்ய வேண்டும்!

லூக் 12:15" "எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள்."

இயேசு மனிதநேயம் கொண்டவர் இந்த மனித நேயம் அவரை மனுவுரு எடுக்கச் செய்தது (யோவா 1:.14) லூக்கா நற்செய்தியாளர் 4ம் அதிகாரத்திலே இயேசு இந்த உலகிற்கு வந்ததன் நோக்கத்தைச் சொல்கிறபோது அவர் கொண்டிருந்த மனித நேயத்தை புலப்படுத்துகின்றார்!

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்க மிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர்அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்!.(லூக் 4:.18-19).

இயேசுவின் இந்த மனிதநேய பார்வை இன்று சமூகத்தின்மீதும், தனிமனிதர்மீதும் ஊட்டப்பட வேண்டும். மனித உரிமைகளும், கருத்துச் சுதந்திரமும், மனித உயிர்களை காத்தலும் காத்திரமாய் மதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அடுத்தவர் நலனிலே அக்கறை, கரிசனை கொண்டவனாக வாழ வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்விலே மனிதர்களை நாம் எவ்வாறு மதிக்கின்றோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனை பணத்திற்காக மதிக்கின்றோம் அதிகாரத்திற்காக, மதிக்கின்றோம். நாகரீகத்திற்காக மதிக்கின்றோம். ஆனால் மனிதத் தன்மைக்காக மதிக்கின்றோமா?

இயேசு பாவிகள் அனாதைகள், ஏழைகள், சமாரியர்கள், விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் வறியோர்கள் எல்லா தரப்பினரையும் பேதமின்றி அவர்களை மனிதர்களாக மட்டும் பாவித்து மதித்தார் இதை நாம் எப்போது பின்பற்றப் போகின்றோம்?

எனவே பிறக்கும் நத்தாரும், புதுவருடமும் நன் வாழ்வுக்கு அர்த்தமுள்ளதாய் அமைய வேண்டுமானால், வாழ்வின் நிறைவை பணக்குவிப்பில் தேடாமல் சுயநலங்களை களைத்துவிட்டு, மனிதத்தை மதிப்பதில் தேடுவோம்!

"இனிதான வாழ்வை இகமதில் வாழ
மனித நேயம் கொண்டு வாழ்வோம்
மனிதம் நம்மில் பிறந்திட வேண்டி
மனத்தை என்றும் திறந்து வைப்போம்!"

– அருட்பணி இக்னேசியஸ் யூட் சர்வானந்தன் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் குதூகலிக்க.....

குடும்பம் குதூகலித்தால்தான் தனிமனிதன் குதுகலிக்க முடியும். அதே சமயம் தனிமனிதன் குதூகலித்தால் குடும்பம் தானாக குதூகலிக்கும். எனவே குடும்பம் இனிய இல்லறமாக அமைய குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே மனத்துடன் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொரு மனித உள்ளமும் அமைதிக்காகவும் சந்தோஷத்திற்காகவும் ஏங்கித் தவிப்பது மனித நியதி. அமைதியும் சந்தோஷமும் வெளியிலிருந்து வருவது அல்ல. மாறாக எம் அகத்திலிருந்து வெளிக்கொணரப்பட வேண்டியவை. பகிர்வின் வெளிப்பாடே மகிழ்சி, அன்புணர்வின் ஆக்கமலர்சியோ இனிமை, சுயகட்டு பாட்டின் மறுபக்கமே உளச்சுதந்திரம்!.

தியாகத்தின் தீர்ப்பே அமைதி, எனவே ஒரு குடும்பத்தில் அன்பு, பகிர்வு சுய கட்டுப்பாடு, தியாகம் இருக்குமானால் அங்கு மகிழ்ச்சி, இனிமை, சுதந்திரம், அமைதி நிறைந்திருக்கும். அன்பு யாரிடம்? கணவன்-மனைவியிடம், பெற்றோர் - பிள்ளைகளிடம், சகோதர சகோதரியிடம் பகிர்வும் அப்படியே.

சுயகட்டுப்பாடு, தியாகம் என்பன தன்னகத்தே இருத்தல் வேண்டும். இன்று சுயகட்டுப்பாடு இன்மையால் தான்தோன்றித் தனம் தலைவிரித்தாடும் குடும்பங்கள் பல. உ..ள்ளன. இப்படி பல குடும்பங்களின் கூட்டமே சமுதாயம். எனவே சுயகட்டுப்பாடு இன்மையால் கெட்டழிந்திருக்கின்றது எம் வாழ்வு. இன்று எம் நாடு உண்மையான அமைதி நிலையின்றித் தவிக்கிறது. கிறிஸ்தவ குடும்பங்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டில் எமது பங்கு என்ன? எமது குடும்பங்களிலே உண்மை, அமைதி, சுதந்திரம், இருக்கிறதா?.

"தம் மகனிடம் அன்பு கொண்டிருக்கும் தந்தை அவனை இடைவிடாது தண்டிப்பார்: அப்போது அவர் தம் இறுதி நாட்களில் மகிழ்வோடு இருப்பார் தம் மகனை நன்னெறியில் பயிற்று விப்பவர் அவனால் நன்மை அடைவார்: தமக்கு அறிமுகமானவர்களிடையேஅவனைப்பற்றிப் பெருமைப்படுவார்" (சீராக்: 30-1-2).

இதற்கேற்ப எம் பிள்ளைகளை வளர்க்கும் போது பிள்ளைகளை கண்டித்து திருத்த வேண்டியது பெற்றோராகிய எம் ஒவ்வொருவரின் கடமையாகும். ஆனால் இன்று எம் குடும்பங்களில் நிகழ்வது என்ன? நாம் பிள்ளைகளை திருத்துகின்றோமா? அல்லது பிள்ளைகளுக்கு பயந்து அவர்கள் வழியில் வாழ விட்டு விடுகின்றோமா? பிள்ளைகளைத் தண்டித்தால் பிள்ளைகள் தம்மை அன்பு செய்ய மாட்டார்கள் என்ற பயம் பெற்றோரின் மனதிலுண்டு இப்பயத்தினால் உந்தப்பட்ட பெற்றோர் பிள்ளைகள் கேட்பவை எல்லாவற்றையும் கொடுப்பதும், அவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஆமா போடுவதுமாக இருக்கின்றார்கள். இப்படிச் செய்வதன் மூலம் பெற்றோர் தம்மைத்தானே அன்பு செய்து தம் தேவையைப் பூர்த்தி செய்கின்றார்களே ஒழிய, பிள்ளையை அன்பு செய்வது இல்லை இங்கே தான் பெற்றோர் பிள்ளைகளிடத்தில் இருக்க வேண்டிய தியாகம் வெளிப்பட வேண்டும். அதாவது பெற்றோரின் நலனுக்காக அல்ல, பிள்ளைகளின் வருங்கால நலனுக்காக பிள்ளைகளை கண்டித்து திருத்த வேண்டிய நேரத்திலே கண்டித்து திருத்த வேண்டியது பெற்றோரின் பாரிய பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான சவால்கள் நிறைந்த இவ்வுலகில் இறைசாட்சியாக வாழ அழைக்கப்பட்ட கிறிஸ்தவ குடும்பங்கள் தாம் இறைவனில் தங்கி இறைவனுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்வதன் மூலம் தான் திருக்குடும்பத்தைப் போல வாழ முடியும். இறைவனுக்கு முன்னுரிமை கொடுப்பது என்பது வெற்றிக்கு முன்னுரிமை கொடுப்பதாகும். எனவே எம் கிறிஸ்தவ குடும்பங்களிலே நாளாந்த செபத்திற்கு முன்னுரிமை கொடுத்து இறைவனின் ஆசீர் பெற்று எம் நாளாந்த வாழ்வில் வரும் சவால்களை வெற்றி கொண்டு வீறுநடை போட்டு குதூகலிக்கும் குடும்பங்களாக திகழ முற்படுவோம்.

- அருட்சகோதரி மேரி நிரோஷா A.C. -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org